1986 நவம்பர் 21]

பதாக நேற்றைய தினம் கூட தொலைக்காட்சியில் பேசுகின்ற போது அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதுபோல கிராமப் புறத்திலே அதிகமாக மூளைக் காய்ச்சல் வருவதால் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டியிருக்கின்றது. ஆகவே, அதற்கு என்று அரசு ஏதாவது ஒரு திட்டத்தைத் தீட்ட முன்வருமா ?

(முற்பகல் 9—40.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூளைக் காய்ச்சல் நோய் பற்றி எத்தனையோ முறை இந்த மன்றத்திலே பேசி முடித்தாகிவிட்டது. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் இரண்டு, இரண்டு ஆரம்ப சுகாதார நிலையம் என்றல்ல, 30 ஆயிரம் மக்கள் தொகை இருக்க வேண்டு மென்று சொன்னேன். மேற்கொண்டு 5 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும், 10 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன் னேன். இவ்வளவையும் கொடுத்த பிறகு தான் ஆரம்ப சுகா தார நிலையம் ஆரம்பிக்க முடியும்.

திண்டுக்கல் வட்டம் அம்பாத்துறையிலுள்ள கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்ப நல நிறுவனம்.

127—(*வினா எண். 3677) திரு. என். எஸ். வி. சித்தன் : மற்றும் திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் திண்டுக்கல் தாலுகா, அம்பாத் துரையில் அரசு முழுமானியம் பெற்று இயங்கும் 'கிராமிய நல் வாழ்வு மற்றும் குடும்ப நல நிறுவனத்தை'' அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) ''கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்ப நல நிறுவனத்தை'' அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ், வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்பநல நிறுவனத்திற்கு'' மத்திய அரசு எவ்வளவு மானியம் கொடுக்கிறது ? மாநில அரசு எவ்வளவு மானியம் கொடுக் கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எவ்வளவு மானியம் என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் இரண்டு அரசுகளும் மானியம் கொடுக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்பநல நிறுவனம் முன்னாலே சொசைட்டி ஆக்ட்-ன் கீழ் இயங்கி வந்தது. பின்னாலே டிரஸ்ட் ஆக்ட்-ன் கீழ் அது மாற்றப் பட்டதினாலும், அங்கே பல்வேறு தவறுகள் நடைபெற்ற தாலும், அதனை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்பநல நிறுவனத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் ஒரு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லையென்று சொன்னார்கள். இதுவரை இப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசிடம் இல்லையென்றாலும் கூட இனிமேலாவது அதனை அரசு ஏற்று நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே கேட்ட கேள்விக்கு நான் அளித்த விடையை திருத்திக்கொள்கிறேன். மத்திய அரசு மானியம் மற்றும் தனியார் நிறுவனங்களின் மூலமாக அம்பாத்துறையில் கிராமிய நல்வாழ்வு மற்றும் குடும்பநல நிறுவனம் நடத்தப்பட்டு வருகிறது என்று என்னுடைய விடையை திருத்திக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இனிமேலாவது அந்த நிறுவனத்தை அரசு ஏற்று நடத்துமா என்று கேட்டார்கள். ஏற்கெனவே இந்த நிறுவனத்தை மத்திய அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று கோரிக்கை விடுத் திருக்கிறார்கள். மத்திய அரசு மாநில அரசிடம் இதுபற்றி விளக்கம் கேட்டிருக்கிறது. தமிழக அரசு விளக்கம் எழுதி அனுப்பியதற்குப் பிறகு, மாநில அரசுதான் இதனை ஏற்று நடத்த வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்தால் மாநில அரசே அதனை ஏற்று நடத்தும். ஆனால் அதற்கான முழு மானியத்தையும் மத்திய அரசே கொடுக்க வேண்டிவரும்.

விளாத்திகுளம் அரசு மருத்துவ மனை.

*128—(*வினா எண். 7852)* திரு. ச. குமரகுருபர ராம நாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் அரசு மருத்துவமனைக்கு அதிக படுக்கை வசதி, மேலும் இரு மருத்துவர்கள், பெண் மருத்துவர் வசதி ஆகியவை செய்யப்படுமா ?